# வருடாந்த அறிக்கை
# 2014

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான
## தராதர அங்கீகார சபை

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

# உள்ளடக்க அட்டவணை


| விடயம் | பக்கம் |
|---|---|
| 01. அறிமுகம் | 02 |
| 02. தரம் சம்பந்தமான கொள்கை | 03 |
| 03. இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம், தொலைநோக்கு, இலக்கு, குறிக்கோள் | 04 |
| 04. செயற்பாடுகளும் நுட்பங்களும் | 05 |
| 05. தலைவரின் செய்தி | 07 |
| 06. பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு | 11 |
| 07. ஆளுநர் சபை | 17 |
| 08. ஸ்தாபகக் கட்டமைப்பு | 18 |
| 09. முகாமைத்துவம், குழுக்கள், SLAB ஊழியர்கள் மற்றும் மதிப்பீட்டாளர் குழு | 19 |
| 10. நடவடிக்கைகள் | 22 |
| 11. 2014 இல் முக்கிய செயற்பாடுகள் | 26 |
| 12. நிதித்துறை முக்கிய அம்சங்கள் - 2014 | 28 |
| 13. நிதித்துறை அறிக்கைகள் - 2014 | 33 |
| 14. நிதிசார் அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் | 34 |
| 15. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் | 45 |
| 16. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீதான தலைவரின் கருத்துக்கள் | 54 |
| 17. இலங்கை தராதர அங்கீகார சபையின் இலச்சினை | 60 |
| 18. தராதர அங்கீகாரக் குழுக்கள் - இணைப்பு I | 61 |
| 19. ஸ்தாபக அமைப்பு - செயற்பாடு | 66 |
| 20. தராதர அங்கீகாரம் பெற்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்கள் - 2014 | 67 |

## அறிமுகம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராரதர அங்கீகார சபை (SLAB), இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கான 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனமாகும். அது, 2014 ஆம் ஆண்டில் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் SLAB செயற்பட்டு வந்தது.

இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கான அதியுயர் ஸ்தாபனமாக SLAB நாட்டின் தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பலதரப்பட்ட முயற்சிகளை எடுத்துள்ளது. NQI ஆனது, பரிசோதனை, கண்காணிப்பு மற்றும் சான்றிதழ் வழங்குதல் போன்ற செயற்பாடுகளின் போதும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் போது பொருட்கள் சேவைகள் வழங்குகைகளின் போதும் எழும் தீர்வையற்ற தடைகளை நீக்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பரிசோதனை மற்றும் அளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வுகூடங்கள், கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு (CABs) தரம் தொடர்பான பிரச்சினைகளின் போது இணக்கமான முறையில் தராதர அங்கீகார சேவைகளை வழங்குவதற்கு NQI இன் பூரணத்துவம் பங்களிப்புச் செய்கின்றது. தரக்கட்டுப்பாடு, அளவைகள் மற்றும் சட்டங்களை நிர்வகிக்கிக்கும் தேசிய தர உட்கட்டமைப்பின் ஏனைய முக்கிய அம்சங்களைப் பலப்படுத்தும் பொறுப்பையும் SLAB கொண்டுள்ளது.

தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) சம்பந்தப்பட்ட மட்டில், பொதுமக்கள் சுகாதாரம், தொழில் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு, நீதியான வர்த்தகம் போன்ற சிறந்த வர்த்தக ரீதியிலான வழிமுறைகளை நிலைநாட்டுவதற்கான தேசியப் பொறுப்பை, ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் கொண்டுள்ளன. பங்குதாரர்களின் கேள்வியின் பேரில் தராதர அங்கீகார சேவைகள் சுயமாக வழங்கப்படுவதனால், சட்டதிட்டங்கள் பேணப்படுகின்றமை தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணிக்கவும், அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் தேசிய பொறுப்பைக் கொண்டுள்ளன. மேற்குறிப்பிட்ட சிறந்த வழிமுறைகள் நல்ல பலனைத் தரவேண்டுமானால், உற்பத்தியாளர்களும் சேவை வழங்குநர்களும், சம்பந்தப்பட்ட தரங்களையும், ஒத்தியல்பு மதிப்பீடுகளையும், பொருட்கள் சேவைகள் வழங்கப்படும் சமயத்தில் தீவிரமாகக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இந்தவித மூன்றாம் தரப்பு உறுதியளித்தல் என்பது, தகுந்த தேசிய மற்றும் சர்வதேச நியமங்கள் அடிப்படையில் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தராதர அங்கீகாரம் வழங்கப்பட்ட இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும், பக்கச்சார்பின்மை, தகைமை, நேர்மை, ஒத்தியல்பு மதிப்பீட்டின் நம்பகத்தன்மை போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டின் பிரதான கொள்கைகளை உறுதி செய்கின்றன. இத்தகைய மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு வழிமுறைகளுக்கு அமைய, சுதந்திரமான, தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளர்களினால் நடத்தப்படுகின்றன. ஒத்தியல்பு மதிப்பீடுகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் போது, அவை அனைத்தும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதர அங்கீகாரக் கொள்கைகளுக்கு அமையவே

மேற்கொள்ளப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம், பொருட்களுக்கும், சேவைகளுக்கும் போதியளவு சந்தை வாய்ப்புக்களும், நீதியின் அடிப்படையிலான போட்டியும் உருவாக்கப்படுகின்றது. இறுதியாக, வாடிக்கையாளர் மற்றும் பங்காளிகள் மத்தியில் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

இலங்கை தராதர அங்கீகார சபை, இல.546/4, காலி வீதி, கொழும்பு 3, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது. அதன் தொடர்பாடல் விபரங்கள் வருமாறு:

தொலைபேசி - 0112 372 638/9, பணிப்பாளர் - 0112 372 680
தொலைநகல் - 0112 372 629,
மின்னஞ்சல் - slabmail@slab.lk, director@slab.lk

இணையத்தளம் - www.slab.lk

## தரம் சம்பந்தமான கொள்கை

SLAB என்பது, உயர்மட்ட நேர்மை, திறமை, பயன்பாடு என்பனவற்றின் உச்சக்கட்ட நிலையில் தராதர அங்கீகாரத்தை வழங்குவதில் அர்ப்பணித்துப் பணிபுரியும் சேவை வழங்கும் ஸ்தாபனமாகும்.

வாடிக்கையாளர்கள், ஏனைய பங்காளிகள், வர்த்தகத் துறையினர் ஆகியோரின் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேசமயத்தில், சர்வதேச தரங்கள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்ட வகையில் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குவதில் SLAB அர்ப்பணித்துப் பணிபுரிகிறது. சர்வதேச அங்கீகாரத்தை மேம்படச் செய்யவென, சர்வதேச நிறுவனங்களின் கடமைகளில் திறமையாகவும், செயல்திறன் மிக்கதாகவும் பங்கேற்பதற்கு SLAB தயாராகவுள்ளது.

SLAB யின் நடவடிக்கைகளில் உச்சக்கட்ட தொழில்திறனுடனான பங்களிப்பை வழங்கவென, சேவையாளர்களும், மதிப்பீட்டாளர்களும் அவர்களது தகைமைகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்கான சூழலை SLAB வழங்கும்.

ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் செயற்பாடுகளையும், தேவைகளையும் சூழல் கோரிக்கைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதோடு, இவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்தவென பொருத்தமான மாற்றங்களை SLAB பூர்த்தி செய்யும்.

## இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான, தராதர அங்கீகார சபை இல.32 இன் கீழ் உருவாக்கப்பட்டது. தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படும் இந்தச் சபை SLAB சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பதின்மூன்று (13) அங்கத்தவர்களைக் கொண்ட மன்றத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. இதன் பணிப்பாளர், சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் (CEO) ஆளும் மன்றத்தின் செயலாளருமாவர்.

## தொலைநோக்கு

'இந்தப் பிராந்தியத்தில் தராதர அங்கீகார முன்னணி அமைப்பாக அங்கீகரிக்கப்படுவதோடு, அதன் சேவைகள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தையும், உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுக்கொள்ளலையும் பெறுவதற்கு உதவுதல். ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு தராதர அங்கீகார சேவைகளை வழங்கும் போது, வர்த்தகம், கைத்தொழில், அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் மாற்றமடையும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் புதுமை புகுத்தல்'

## இலக்கு

'சர்வதேச அங்கீகாரத்துடன் தராதர அங்கீகார சேவைகளை வழங்குதலும், முன்னேற்றுதலும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதில் ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு உதவுதலும்'.

## நோக்கங்களும் பிரதான செயற்பாட்டுச் சுட்டிகளும்

சபையின் நோக்கங்களாக பின்வரும் விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பொருத்தமான மற்றும் செயற்படுத்தும் வகைகளில் ஒவ்வொரு நோக்கத்தையும் தொடர்ந்து பிரதான செயற்பாட்டுச் சுட்டிகள் (KPI) அதரப்பட்டுள்ளன.

- தராதர அங்கீகாரம் எனும் எண்ணக்கருவை மேம்படுத்தல்
  KPI - SLAB தராதர அங்கீகாரம் தொடர்பான வாடிக்கையாளர்களின் அறிவு 10% விருத்தி

- பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
  KPI - வாடிக்கையாளர்களின் 20% அதிகரிப்பு

- தராதர அங்கீகார சேவைகளை வழங்கல்
  KPI - 25% தராதர அங்கீகாரங்களின் அதிகரிப்பு

- சிறந்த நிர்வாகம்
  KPI - 100% இற்றைப்படுத்தப்பட்ட தர முகாமைத்துவ ஒழுங்குமுறை

- சர்வதேச அங்கீகாரம்
  KPI - தராதர அங்கீகாரத் திட்டங்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுதல்

- மனிவளங்களின் திறமைகளை வலுப்படுத்தல்
  KPI - 25% தகைமைகளை உறுதிப்படுத்தல்

- சுயதேவைகளை பூரணப்படுத்தலை அடைதல்
  KPI - 2014 ஆம் ஆண்டில் 75% சுய தேவைகளின் பூரணப்பாடு.

## செயற்பாடுகளும் நுட்பங்களும்

சட்டத்திற்கு இணங்கும் வகையில் நோக்கங்களையும், பிரதான செயற்பாட்டுச் சுட்டிகளையும் (KPI) அடையவென SLAB கீழ்க்காணும் செயற்பாடுகளையும், நுட்பங்களையும் கடைப்பிடிக்கும்படி கேட்டுள்ளது.

- சர்வதேச மற்றும் தேசியத் தரங்களுக்கு ஏற்ற வகையில், ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களின் (CABs) அதராதர அங்கீகாரத்தைப் பூர்த்தி செய்தல்

  - ❖ ஆய்வு கூடங்களின் பரிசோதனை (ISO/IEC 17025)
  - ❖ ஆளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வுகூடங்கள் (ISO/IEC 17025)
  - ❖ மருத்துவ ஆய்வுகூடங்கள் (ISO 15189)
  - ❖ ஒழுங்குமுறைகளுக்கான சான்றிதழ் அளிக்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17021)
  - ❖ உற்பத்திப் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17065)
  - ❖ ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புகள் (ISO/IEC 17024)
  - ❖ பச்சைவீட்டு வாயுக்களைச் (GHG) செல்லுபடியாக்குதலுக்கும், சரிபார்த்தலுக்குமான அமைப்புகள் (ISO 14065)
  - ❖ கண்காணிப்பு அமைப்புகள் (ISO/IEC 17020)
  - ❖ தகைமை மதிப்பீட்டுத் திட்டங்கள் (ISO/IEC 17043)
  - ❖ சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் (GLP)

- தேசியத் தரக் கொள்கைகளில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளுக்கு ஏற்ற வகையில், தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

- சம்பந்தப்பட்ட பங்காளித்துவ அமைப்புக்களுக்கென மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்களையும், விழிப்புணர்ச்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்துதல்.

- ஒத்தியல்பு மதிப்பீடு பற்றிய ஒத்துழைப்பிற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய மன்றமாக செயற்படுதல்.

- தொழில்நுட்ப அறிவை மேம்படச் செய்து பரவலாக்குவதன் மூலம் ஒத்தியல்பு நடவடிக்கைகளிலும் தராதர அங்கீகாரத்திலும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.

- தராதர அங்கீகாரத்திற்கென தேசிய வழிமுறை அபிவிருத்தி செய்யப்படுவதற்கு உதவுதல்.

- இதுபோன்ற வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர அங்கீகாரம் சம்பந்தமான உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

- தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீடித்தல், குறைத்தல், இடைநிறுத்தல், மீளப் பெறுதல் என்பனவற்றிற்கென ஒத்தியல்பு மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், நடத்துதல்.

## தலைவரின் செய்தி

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB) 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை உற்பத்திப் பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் தரத்தை நிச்சயிப்பதற்கான சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், ஒன்றுபடுத்தவுமென உருவாக்கப்பட்ட தேசிய தர உட்கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய தராதர அங்கீகார சபை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையாகும். சர்வதேச வர்த்தகத்திற்கு உதவவும், எமது ஏற்றுமதிகளுக்கு தீர்வையற்ற தொழில்நுட்பத் தடைகளைக் குறைப்பதற்குமான ஒத்தியல்பை முக்கிய அம்சமாகக் கொண்டு, SLAB யினால் 2014 ஆம் ஆண்டில் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. SLAB யின் நடவடிக்கைகள் பொதுச் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் என்பனவற்றின் பாதுகாப்புக்கென SLAB யின் நடவடிக்கைகள் பெரிதும் உதவியுள்ளன.

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழான நிறுவனம் என்ற வகையில், தேசிய பொருளாதார அபிவிருத்தி, பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில் SLAB முக்கிய பங்கை வகித்திருந்தது. இத்தகைய நோக்கங்களை அடைவதற்கென வகுக்கப்பட்ட பல்வேறு இலக்குகளும், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். SLAB அதன் 9வது வருட நடவடிக்கைகளை 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்துள்ளது. ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதிலும், சகலவித சவால்களையும் வெற்றி கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கான நிலையில் SLAB தற்சமயம் உள்ளது என்பதிலும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தராதர அங்கீகாரம் என்பது, விருப்பத்தின் அடிப்படையில் நடைமுறைக்கிடப்படுவதனால், நிறுவனங்களை தராதர அங்கீகாரத்திற்கென அழைப்பதில் பங்காளிகள் மத்தியில் இந்த அம்சத்தை மேம்படச் செய்வது அவசியமாகும். இதனை இலக்காகக் கொண்டு பல விழிப்புணர்ச்சித் திட்டங்களும், கருத்தரங்குகளும் பல்வேறு துறைகளில் நடத்தப்பட்டுள்ளன. ஒழுங்கமைப்பாளர்களின் செல்வாக்கு போதியதாக இல்லாததனால், தராதர அங்கீகாரத்திற்கென இந்த வருடம் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் குறைவாக இருந்ததனால், இந்த விடயத்திலான முன்னேற்றம் திருப்திகரமாக அமையவில்லை. பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்களை நடைமுறைக்கிடுவதற்குப் பொறுப்பாகவுள்ள அதிக எண்ணிக்கையான ஒழுங்கமைப்பு அதிகாரிகளை ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் SLAB உத்தியோகத்தர்கள் சந்தித்துள்ளனர். இந்தச் சந்திப்புக்களினது முக்கிய நோக்கம், சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது முக்கிய தொழில்நுட்பத்

தீர்மானங்களை மேற்கொள்ளும் சமயத்தில், தராதர அங்கீகாரம் பெற்ற அமைப்புக்களினால் வழங்கப்படும் தகவல்களை உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை வற்புறுத்தித் தெரிவிப்பதாகும்.

சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பரிசோதனை அறிக்கைகளின் சரியான தன்மையும், நம்பகத்தன்மையும் முக்கியமானவை என்பதனால், உணவுப் பாதுகாப்பு, சூழல் அசுத்தமடைதல், பொதுச் சுகாதாரம், மிக மோசமான சிறுநீரக நோய்கள், என்பனவற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இலங்கையில், இந்த வழிமுறை பொருத்தமானதல்ல. நாளாந்த தரக் கட்டுப்பாடு சம்பந்தமான விடயங்களில் தராதர அங்கீகாரம் என்பதை இணைத்துக்கொள்வதற்கு பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பல்வேறு சட்டங்கள் இன்னமும் தரமுயர்த்தப்படவில்லை. சட்டங்களின் அடிப்படையில் தராதர அங்கீகாரத்திற்கென இணைத்துக்கொள்ளப்பட்ட ஒழுங்கமைப்பு நிறுவனங்களும், தத்தமது நடவடிக்கைகளை திட்டவட்டமாக கண்காணிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. தராதர அங்கீகாரத்திற்கென மேலதிக அமைப்புக்களை இணைத்துக் கொள்வதற்கு ஒழுங்கமைப்பாளர்களின் மேலதிக நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை என நான் திட்டவட்டமாக நம்புகின்றேன். இந்த வகையில் 2015 ஆம் ஆண்டில் மேலும் தீவிரமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது எமது திட்டமாகும்.

தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்கயின் கருத்துக்களின் அடிப்படையில், நாட்டின் சகல பாடசாலைகளிலும் ஆய்வுகூடப் போட்டியை SLAB ஆரம்பித்திருந்தது. சிறந்த விஞ்ஞான ஆய்வுகூட நடவடிக்கைகள், தராதர அங்கீகாரம், தரம், 24 மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான அளவைகள் என்பனவற்றில் கல்வி அமைச்சுடன் இணைந்து, விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் போட்டிக்கென 300 விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. போட்டி முடிவடைந்ததும், ஐந்து தேசிய வெற்றியாளர்கள், 7 மாகாண வெற்றியாளர்கள், 33 வலய வெற்றியாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு, 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ஆம் திகதி இதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டது.

தராதர அங்கீகாரத்திற்கான மருத்துவப் பரிசோதனைகள் உட்பட பல்வேறு பரிசோதனைகள் சம்பந்தமாகவும், ஆசிய பசிபிக் லெபுரேட்டறி அக்ரடிட்டேஸன் கோப்பரேன் (APLAC) மற்றும் சர்வதேச ஆய்கூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனம் (ILAC) என்பனவற்றுடனான பரஸ்பர அங்கீகார ஒழுங்கமைப்பிலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து தராதர அங்கீகாரத்திற்கும் SLAB யும் கைச்சாதிதிட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் பசிபிக் தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்தின் மற்றும் சர்வதேச தராதர அங்கீகார மன்றத்தின் பல்தேசிய அங்கீகார ஒழுங்கமைப்பின் கையொப்பமிடல் அந்தஸ்துக்கு 2014 ஆம் ஆண்டில் ISO

9001, ISO 14001 மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் என்பனவற்றிற்கென SLAB அனுமதிக்கப்பட்டிருந்தது. FSMS சான்றிதழ் வழங்கலுக்கென PAC, MLA என்பனவற்றில் கையொப்பமிடும் அந்தஸ்தையும் SLAB பெற்றிருந்தது. அதேவேளை, பரிசோதனைகளின் தராதர அங்கீகாரத்திற்கென SLAB APLAC மற்றும் MRA யிடம் விண்ணப்பித்திருந்தது.

இத்தகைய சர்வதேச மற்றும் பிராந்திய அங்கீகாரம் SLAB யினால் வழங்கப்படும் தராதர அங்கீகார சான்றிதழ்களுக்கு பெறுமதி சேர்க்கிறது. வெளிநாடுகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான மீள் பரிசோதனை அல்லது மீள் சான்றிதழ் வழங்கல் என்பனவற்றின் தேவையை விலக்கி, SLAB தராதர அங்கீகார சான்றிதழ்கள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இருந்த போதிலும், கையொப்பமிடும் அந்தஸ்தை தொடர்ந்தும் பேணுவதற்கு சம்பந்தப்பட்ட சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களின் சர்வதேச தரங்கள், சட்டங்கள் என்பனவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அவசியமாகும். மதிப்பீடுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வழிமுறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

கையொப்பமிடல் அந்தஸ்தை தொடர்ந்து பேணுவதற்கு இத்தகைய சர்வதேச அமைப்புக்களின் பல்வேறு கூட்டங்கள், கருத்தரங்குகள், வருடாந்த மாநாடுகள் என்பனவற்றில் பங்குபற்றுவது அவசியமாகும். SLAB அதிகாரிகள் 2014 ஆம் ஆண்டில் ILAC, APLAC, IAF, PAC மற்றும் சார்க் அமைப்புக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த மத்திய வருட கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் பங்குபற்றியிருந்தனர்.

SLAB ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சபைக்கென ஆட்சேர்ப்பதும், அவர்களை தொடர்ந்து வைத்திருப்பதும் முக்கிய பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் பிரசவ விடுமுறையில் சென்ற சிலரைத் தவிர ஏனைய சகல ஊழியர்களும் வேலைக்கு சமூகமளித்திருந்ததனால், வேலையின் மொத்தத் தொகை பாதிக்கப்படவில்லை. SLAB ஊழியர்களின் சக்திவளம், கடின உழைப்பு, நிறுவனத்திற்கான விசுவாசம் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 95% ஆனவை, பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

முகாமைத்துவத்தினர் உட்பட SLAB யின் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் அர்ப்பணித்த செயற்பாடே இந்த நிறுவனத்தின் வெற்றிக்கான முக்கிய காரணமாகும். SLAB ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை நான் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் எனது தலைமைக்கு உட்பட்ட சபை

அங்கத்தவர்களுக்கும் எனது விசேட நன்றிகள் உரித்தாகுக. நிறுவனத்திற்கான அவர்களது அர்ப்பணிப்பு பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் SLAB யின் வெற்றிக்கான நடவடிக்கைகளில் பங்களிப்பை வழங்கிய தொழில்நுட்ப மற்றும் ஆராய்சி அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி தாரா விஜயதிலக மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் எனது விசேட நன்றிகள் உரித்தாகுக.

நிறைவாக SLAB மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொள்கை ஆலோசனைக் குழு, தராதர அங்கீகாரக் குழுக்கள், தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள், நிபுணர்கள் குழுக்கள் என்பனவற்றின் அங்கத்தவர்களுக்கும், தராதர அங்கீகார வழிமுறைகள் சம்பந்தமாக வழங்கப்பட்ட அவர்களது தொடர்ச்சியான ஆதரவுக்கும், பெறுமதிமிக்க ஆலோசனைகளுக்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2015 ஆம் ஆண்டில் SLAB யின் நடவடிக்கைகளின் அடிப்படையில், தற்போதைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து பேணும் அதேசமயத்தில், பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதிலும், பொருளாதார அபிவிருத்தியிலுமான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவுள்ள ஒழுங்கமைப்பு விடயங்களை விஸ்தரிப்பதில் கவனம் செலுத்தப்படும்.

பாசன் பிரியலால் குணசேன
தலைவர்

## பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுச் சுருக்கம்

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடவடிக்கைகைள ஆரம்பித்த SLAB, 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 9 வருட கால சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. ஆரம்பத்தில் அதன் நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெற்ற போதிலும், பின்னர் தொடர்ச்சியான அபிவிருத்தியை அது பதிவு செய்துள்ளது. மருத்துவப் பரிசோதனை ஆய்வுகூடங்கள், தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், வழிமுறைகள், உற்பத்திப் பொருட்கள், நபர்கள் மற்றும் பரிசோதனை அமைப்புக்கள் என்பனவற்றுக்கு சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் போன்ற ஒத்தியல்பு மதிப்பீட்டுத் துறைகள் உட்பட சகல பிரிவுகளிலும் தராதர அங்கீகாரத் திட்டங்களை SLAB ஆரம்பித்திருந்தது. இவற்றுக்கு மேலதிகமாக, பசுமை வாயு (GHG) மற்றும் உறுதிப்படுத்தல் அமைப்புக்கள், செயற்திறன் பரிசோதனைத் திட்டங்கள், சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் (GLP) என்பனவற்றக்கான புதிய தராதர அங்கீகாரம் வழங்கும் திட்டத்தையும் SLAB ஆரம்பித்துள்ளது.

தராதர அங்கீகாரம் என்பது, விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெறுகிறது. சேவைத்துறை உட்பட கைத்தொழிலின் பல்வேறு பிரிவுகளும், உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான குறிப்பிட்ட தரம், வழிமுறைகள், செயன்முறைகள் என்பது பற்றிய தரங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும், உற்பத்திப் பொருளுக்கு சந்தை வசதியை இலகுவாக அடையவுமென, ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகளை ஆரம்பிக்க முடியும். இந்த வழிமுறைகள், சமமான நிபந்தனைகளின் அடிப்படையில், போட்டியை நிச்சயிக்கவென பொருளாதாரத்திற்கு உட்பட்ட வகையிலும், வெளியேயும் வர்த்தகம் மற்றும் பொருட்கள், சேவைகள் என்பன சம்பந்தமாக பிரயோகிக்க முடியும். பாரம்பரிய வழிமுறைகளின் அடிப்படையில், பொருட்களும் சேவைகளும் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப சட்டங்களுக்கு உட்பட்டிருத்தல் அவசியமாகும். இத்தகைய சூழ்நிலையில், குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மிகச்சிறந்த, நம்பகமான ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகள் மிகவும் அவசியம். தரமான உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பன சம்பந்தமாக மேலதிகக் கோரிக்கைகள் விடுக்கப்படும் சமயத்தில், தொழில்நுட்பச் சட்டங்கள் மற்றும் தரங்கள் என்பன சம்பந்தமான இணக்கம் தேவைப்படும். அரசாங்கம் ஒழுங்கமைப்பு அதிகார நிறுவனம் என்ற வகையில் தரம், சுகாதாரம், பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு, சிறந்த சந்தை என்பனவற்றில் பொருட்களுக்கும், சேவைகளுக்கும் அங்கீகாரம் வழங்குவதற்கான சட்டங்களை நடைமுறைக்கிட முடியும்.

ஒழுங்கமைப்பாளர்களிடம் இருந்து மிகவும் குறைந்தளவிலான கோரிக்கைகளே கிடைக்கப் பெற்றதனால், நாட்டின் தேவையைக் கருத்திற் கொண்டு, தராதர அங்கீகாரத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவென, தற்போதைய வாடிக்கையாளர்களுடன் ஆய்வுக்குரிய

வருடத்தில் SLAB நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வந்திருந்தது. தேவைக்கு ஏற்ற வகையில், ஒழுங்கமைப்பாளர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கப் பெற்றிருந்தால், இத்தகைய முன்னேற்றகரமான வளர்ச்சி பாதிப்படைந்திருக்க மாட்டாது. இத்தகைய மிகக் குறைந்த ஒழுங்கமைப்புக் கண்காணிப்புச் சூழலில், தராதர அங்கீகாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்யும் அதேசமயத்தில், நாட்டின் தேசிய தர உட்கட்டமைப்பை (NQI) பலப்படுத்துவதில் மேலதிகக் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். பூரணத்துவம் அடைந்த தேசிய தர உட்கட்டமைப்பில், தற்போதைய வர்த்தக வழிமுறைகளைப் பூர்த்தி செய்யும் ஒத்தியல்பு மதிப்பீட்டு வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டால் மாத்திரமே ஒரு நாட்டின் ஒத்தியல்பு மதிப்பீட்டுத் திட்டங்கள் முன்னேற்றமடையும்.

மூன்றாம் தரப்பு சான்று பகர்தல் என்ற வகையிலான தராதர அங்கீகாரம் ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், தரங்களின் அடிப்படையில் ஒத்தியல்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவென, தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரத்தையும், ஏற்றுக்கொள்ளலையும் வழங்குகிறது. 2014 ஆம் ஆண்டில் QUM, EMS என்பனவற்றக்கான IAF , MLA சர்வதேச அங்கீகாரத்தையும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கலையும் FSMS சான்றிதழ் வழங்குவதற்கென PAC, MLA யையும் SLAB பெற்றிருந்தது. 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆய்வுகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் என்பன சம்பந்தமாக ILAC, APLAC, MRA என்பனவற்றை கொண்டுள்ள அதேவேளையில், 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒத்தியல்பு மதிப்பீடும் இவற்றுக்கு வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் பரிசோதனை நடவடிக்கைகளுக்கென APLAC, MRA இல் அனுமதிக்கப்படுவதற்கும் SLAB விண்ணப்பித்திருந்தது.

சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற தராதர அங்கீகார அமைப்பு என்ற வகையில் SLAB எதிர்நோக்கும் முக்கிய சவால், சர்வதேச நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் தராதர அங்கீகார வழிமுறைகள், கொள்கைகள் என்பனவற்றைத் தரமுயர்த்தி, பேணிப் பாதுகாப்பதாகும். இந்த வகையில், மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கை என்னவென்றால், SLAB முகாமைத்துவ வழிமுறைகள், சம்பந்தப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் நடவடிக்கைகளுக்கென கைந்நூல்களையும், வழிமுறைகள் அடங்கிய விபரக் கொத்துக்களையும் அபிவிருத்தி செய்து பேணிப் பாதுகாப்பாதாகும். இந்த வகையில் சர்வதேச அங்கீகாரத் தேவைகளை மீளாய்வு செய்தல், புரிந்துகொள்ளல், தொடர்ச்சியான கண்காணிப்பு என்பனவற்றோடு தேசிய வழிகாட்டல் நெறிகளின் தரமுயர்த்தலும் அவசியமாகும்.

ஒத்தியல்பு மதிப்பீடுகள் அதிகரிக்கும் சமயத்தில், ஊழியர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் ஆகியோரின் தகைமை அபிவிருத்தி என்பது, சவால்மிக்க ஒரு விடயமாகும். 2014 ஆம்

ஆண்டில் நிதி பற்றாக்குறையாக இருந்த போதிலும், தகைமையும், நம்பகத்தன்மையும் வாய்ந்த வளங்களை SLAB தொடர்ந்து கொண்டிருந்தது.

தராதர அங்கீகாரம் மற்றும் வர்த்தக வழிமுறைகளுக்கான தேவைகளின் காரணமாக, SLAB யின் நோக்கம் மற்றும் இலக்கு என்பனவற்றின் அடிப்படையில் வர்த்தக விண்ணப்பங்களின் பல்வேறு அம்சங்கள் மதிப்பிடப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் பரிசோதனை ஆய்வுகூடங்கள், தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (வழிமுறைகள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் நபர்கள்) சோதனை அமைப்புக்கள் என்பன சம்பந்தப்பட்ட சர்வதேச தரங்களுக்கு அமைவான தராதர அங்கீகாரத்தை வழங்கியிருந்தன.

2014 ஆம் ஆண்டிலும் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகார நடவடிக்கைகள் தொடர்ந்தும் முக்கிய இடத்தைப் பெற்றன. இரசாயன உற்பத்திப் பொருட்கள், உணவுப்பொருள் மற்றும் விவசாயம், ஆடை உற்பத்திப் பொருட்கள், மின் சாதனங்கள், மண் மற்றும் உரம் போன்ற பல்வேறு துறைகளிலும் இந்த திட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றன. நாட்டின் பரிசோதனை ஆய்வுகூடங்களின் இலகுவான செயற்பாட்டிற்குத் தேவையானது எனக் கருதப்படும் அளவியல் மற்றும் தர உறுதிப்பாட்டு ஆதரவை உருவாக்கி வழங்குவதற்கென மேலும் பல நடவடிக்கைகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவ ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம் என்பது, 2014 ஆம் ஆண்டின் கவனத்தைப் பெற்ற மற்றொரு துறையாகும். நாட்டின் மருத்துவ ஆய்வுகூடச் சேவைகளை அபிவிருத்தி செய்வதில் SLAB சுகாதார அமைச்சுடன் இணைந்து பணியாற்றியுள்ளது. மருத்துவ ஆய்வுகூடங்கள், தராதர அங்கீகாரம் சம்பந்தப்பட்ட மட்டில் சுகாதார அமைச்சு வழங்கிய ஆதரவு மிக முக்கியமானதாகும். இதற்கான காரணம், நோயாளிகள் பராமரிப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் என்பனவற்றின் ஒழுங்கமைப்பு அதிகார அமைப்பாக அது இருந்து வருவதாகும். இதற்கு மேலதிகமாக, அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள மருத்து:வ ஆய்வுகூடங்களின் பதிவுக்கான திட்டமும் பிரேரிக்கப்பட்டது. இதில் ஒத்தியல்பு மதிப்பீட்டுப் பங்காளியாக SLAB இருந்து வரும். ஒத்தியல்பு மதிப்பீட்டில் மருத்துவ ஆய்வுகூடங்களின் ஊழியர்களினது திறன் அபிவிருத்தி என்பது, 2014 ஆம் ஆண்டில் SLAB மேற்கொண்ட மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும்.

இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் சம்பந்தப்பட்ட மட்டில் உற்பத்திப் பொருட்களை வெளியே கொண்டு வரும் கட்டத்தில் பொருட்களுக்கும் சேவைகளுக்குமான மூன்றாம் தரப்பு உறுதி கோரப்படும் வழிமுறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான சான்றிதழ் வழங்கல் என்பன முக்கிய விடயங்களாகும். பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்

சந்தர்ப்பத்தில் அவற்றை வாங்குவோர் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் தர சான்றிதழ்களை பெரிதும் விரும்புவதனால், வெளிநாட்டுத் தராதர அங்கீகார அமைப்புக்கள் தொடர்ந்தும் முக்கிய பங்கை வகித்து வருகின்றன. எந்தவொரு காரணமும் அற்ற வகையில், உள்ளூர் உற்பத்தியாளர்களும் வெளிநாட்டு சான்றிதழ்களுக்கு விருப்புரிமை வழங்குவது மற்றொரு கவலைக்குரிய விடயமாகும். இதன்பலனாக, உள்ளூரில் செயற்படும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள், வெளிநாட்டிலிருந்து செயற்படும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுடன் கடும் போட்டியை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றன. பெருமளவு தொகை வெளிநாட்டுச் செலவினமாக்ச செலவிடப்படுகிறது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்கு அமைந்த வகையில், வெளிநாட்டில் இருந்து செயற்படும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களின் நம்பகத்தன்மையை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும். பிரதான வெளிநாட்டுத் தராதர அங்கீகார அமைப்புக்களுடன் சம அடிப்படையில் SLAB சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதனால், தராதர அங்கீகார சான்றிதழ்கள் வழங்குவதில் தேசிய தராதர அங்கீகாரத்தில் தங்கியிருப்பது சிக்கனமானதும் மிகவும் அவசியமானதுமாகும்.

உற்பத்திப் பொருட்களுக்கு சான்றிதழ்கள் வழங்கல் என்பது, பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய மற்றொரு துறையாகும். தேயிலை உற்பத்திப் பொருளுக்கு மேலதிகமாக கறுவா, சுகாதார சுற்றுலா, ஆயுள்வேதப் பொருட்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றுக்கும் இதனைப் பயன்படுத்த முடியும்.

சோதனை அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம் சம்பந்தமாக பெருமளவிலான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், ஒழுங்கமைப்பு அதிகாரிகளின் மிகக் குறைந்தளவிலான நடவடிக்கையினால் அதன் முன்னுரிமையை அது தொடர்ந்தும் இழந்துள்ளது. ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் தராதர அங்கீகார செயற்பாடுகளை மேம்படச் செய்வதற்கான முக்கிய வழிமுறையாக தொழில்நுட்ப சட்டங்களின் திட்டவட்டமான நடைமுறைப்படுத்தலுக்கு தராதர அங்கீகாரம் பெற்ற அமைப்புக்களின் உபயோகம் வரவேற்கப்பட்டது. இந்த வகையில் SLAB ஒழுங்கமைப்பு அதிகார அமைப்புக்களுடன் நெருங்கிப் பணியாற்றியுள்ளது. உணவுப்பொருள் பாதுகாப்பு, வாகனங்களில் இருந்து புகை வெளியேற்றம், NDT மற்றும் பொழுதுபோக்கு களியாட்ட நடவடிக்கை என்பன கடைப்பிடிக்கப்படுவதற்கான புதிய தராதர அங்கீகாரத்தின் கீழ் வந்துள்ளன. மேற்குறிப்பிட்ட தராதர அங்கீகாரச் சேவைகளுக்கான முக்கிய சான்றுகள் சம்பந்தப்பட்ட துறைகளின் நிபுணர்கள், தொழில் அதிபர்கள், ஆகியோரின் பங்களிப்புடன் ISO / IEC 17020 என்பதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட துறை செயல்திறன் சோதனை சேவைகள் (PT) என்பதற்கான தராதர அங்கீகாரத் திட்ட அளவைகளைத் தயாரிப்பதே ஆகும். செயல்திறன் சோதனைச் சேவை என்பது, சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற ஒரு வழிமுறையாகும். ஆய்வுகூடங்களினால் தயாரிக்கப்பட்ட பரிசோதனைகள் மற்றும் தரப்படுத்தல் பெறுபேறுகளின் நம்பகத்தன்மையை நிச்சயிப்பதற்கென சர்வதேச வழிமுறைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவையே இதுவாகும். 2014 ஆம் ஆண்டில் உள்ளூர் PT சேவை வழங்குநர்களுக்கு நிதிச் சலுகைகளை SLAB தொடர்ந்து வழங்கியதோடு, ISO/IEC 17043 க்கு அமைய, தரப்படுத்தலை மேற்கொள்ளும்படி அவர்களுக்கு ஊக்கமும் அளிக்கப்பட்டது. PT சேவை வழங்குநர்களுக்கான விசேட திட்ட அளவைகளின் விபரங்கள் தற்சமயம் SLAB வசம் உள்ளது.

நாட்டிலுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடங்களின் தரத்தை மேம்படச் செய்வதற்கான விஞ்ஞான, தொழில்நுட்ப, புதுமை, வழிமுறைகளுடன் இணைந்த வகையில், R&D ஆய்வுகூடங்களை மேம்படச் செய்வத்றகான திட்டம் என்ற வகையில், சிறந்த ஆய்வுகூட வழிமுறைகளுக்கான (GLP) தராதர அங்கீகாரத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு GLP க்கான பிரமாணமும் உருவாக்கப்பட்டது.

சக்திவளத்தைச் சேமிக்கும் ஒரு நடவடிக்கையாக பசுமை வாயு உறுதியாக்கல் மற்றும் நிரூபண அமைப்புக்களுகான புதிய தராதர அங்கீகாகரத் திட்டம் ஒன்றை SLAB ISO 14065 உடன் இணைந்து வழங்கியது. இந்த நடவடிக்கை, சக்திவளத்தைச் சேமிப்பது மாத்திரமல்லாமல் காலநிலை மாற்றத்தையும் ஓரளவு கட்டுப்படுத்தும். உலக நாடுகளில் உள்ள தராதர அங்கீகார அமைப்புக்கள் பசுமை வாயு (GHG) நிரூபணம் மற்றும் நிரூபண அமைப்புக்கள், அந்த நாடுகளின் தேசியத் திட்டங்கள் மற்றும் இலக்குகளை அடிப்படையாக் கொண்டு தராதர அங்கீகாரத்தை வழங்க நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றன.

சக்திவள முகாமைத்துவ வழிமுறைகளை அபிவிருத்தி செய்தல் என்பது, ISO 50001 வின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட புதியதொரு முகாமைத்துவ வழிமுறையாகும். கைத்தொழில் நிறுவனங்கள் சக்திவளத்தைச் சேமிக்கவும், தேசிய பொருளாதாரத்தில் இந்தத் துறையினால் எற்படும் சுமையைக் குறைக்கவும் ISO 50001 பெரிதும் உதவும். இந்த அணுகுமுறை தேசிய எரிபொருள் பாவனையில் உச்சக்கட்ட குறைப்பை ஏற்படுத்துவதே இதற்கான காரணமாகும்.

தரம், மற்றும் தராதர அங்கீகாரம் சம்பந்தப்பட்ட மட்டில், அதிக எண்ணிக்கையான பயிற்சித் திட்டங்களையும், செயலமர்வுகளையும் SLAB நடத்தியது. அதன் மதிப்பீட்டாளர்கள்,

ஆய்வுகூட ஊழியர்கள், அதனோடு சம்பந்தப்பட்ட குழுவினர் ஆகியோருக்கென இவை நடத்தப்பட்டன. ஒத்தியல்பு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான அடிப்படைத் திறனை உருவாக்குவதற்கு தகைமை அபிவிருத்தி முக்கியமானதாகும். இவற்றுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட சில குழுக்களுக்கென தராதர அங்கீகாரம் சம்பந்தமாக விழிப்புணர்ச்சி மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. CKD யின் ஒழிப்பு சம்பந்தமாகவும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை SLAB அதிகரித்துள்ள அதேசமயத்தில், தராதர அங்கீகார சேவை வழங்கலில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை அது பதிவு செய்தது. 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் 80 வாடிக்கையாளர்களை SLAB கொண்டிருந்தது. இவற்றில் ஐந்து நிறுவனங்கள் வெளிநாட்டிலிருந்து செயல்படுபவையாகும். தொழில்நுட்பத்துறை மற்றும் சேவை வழங்கல் என்பனவற்றில் இத்தகைய வளங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2014 ஆம் ஆண்டில் சாதனை என்று கூறக்கூடிய ரூபா 27.3 மில்லியனை SLAB சம்பாதித்தது. திறைசேரியிலிருந்து பெறும் நிதியைக் கட்டுப்படுத்திய அதேசமயத்தில், SLAB யின் நிதித்தளம் மேலும் பலமடைந்தது. 2016 ஆம் ஆண்டளவில் சொந்த வருமானத்தில் செயற்படுவது SLAB யின் நோக்கமாகும்.

இந்த இலக்குகளை அடைந்து கொள்வதில், ஆளுநர் சபை, SLAB ஊழியர்கள், மதிப்பீட்டாளர்கள், குழு அங்கத்தவர்கள், ஏனைய பங்காளிகள் ஆகியோர் வழங்கிய உதவிகள் பெரிதும் பாராட்டத்தக்கவை. இவர்களது உதவியும், ஆதரவும் கிடைத்திருக்கா விட்டால், தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பாராட்டைப் பெற்றுள்ள, இத்தகைய முன்னேற்றத்தை SLAB அடைந்திருக்க முடியாது. அதன் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கென அவர்கள் வழங்கிய ஆதரவுக்கும், நம்பிக்கைக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**திலக் விக்கிரமசிங்க**
பணிப்பாளர் / பி.நி.அ

## ஆளுனர் சபை

சபையின் அதிகாரங்களும், நடவடிக்கைகளும் ஆளுனர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டின் SLAB சட்டத்தின் 32 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 13 அங்கத்தவர்கள் இந்த ஆளுனர் சபையில் இடம்பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாதமும் இந்தச் சபை கூடுவது வழக்கமாகும்.

2014 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஆளுனர் சபையில் கீழ்க்காணும் அங்கத்தவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

| | |
|---|---|
| திரு.பாசன் பிரியலால் குணசேன | தலைவர் - தொழிற்படு சட்டத்தரணி |
| திரு.மாதவ வித்தியாரத்ன | மேலதிகச் செயலாளர் - தொழில்நுட்ப மாற்றம் (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |
| கலாநிதி நிர்மாலி டி சில்வா | சிரேஷ்ட விரிவுரையாளர் - மொறட்டுவ பல்கலைக்கழகம் (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |
| திரு. சுனந்த பெர்னாண்டோ | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிலையப் பிரதிநிதி) |
| திரு.கே.ஏ.வை.ஆர்.எஸ்.சமரசிங்க | உதவிப் பணிப்பாளர் திட்டமிடல் (உள்நாட்டு வர்த்தக அமைச்சின் பிரதிநிதி) |
| திரு. அசித்த கே செனவிரத்ன | மேலதிகச் செயலாளர் - கொள்கை அபிவிருத்தி (கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி) |
| திரு.கே.பி.குமார | பதில் பணிப்பாளர் (அளவை அலகுகள் தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதி) |
| பேராசிரியர் டபிள்யூ.அபேவிக்கிரம | தலைவர் ITI (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |
| பேராசிரியர் நதீர கருணாவீர | பேராசிரியர் ஒட்டுண்ணியியல்துறை (தேசிய விஞ்ஞான மன்றத்தின் பிரதிநிதி) |
| செல்வி எல்.யூ.என்.சமரசேகர | பணிப்பாளர் - விவசாய தொழில்நுட்பம் (விவசாய அமைச்சின் பிரதிநிதி) |
| திரு. கே.ஏ.எஸ்.கீரகல | மேலதிகச் செயலாளர் - அபிவிருத்தி (சுகாதார அமைச்சின் பிரதிநிதி) |
| திருமதி ஹிரன்சா களுதந்திரி | பணிப்பாளர் - வர்த்தகத் தீர்வைகள் மற்றும் முதலீட்டு அபிவிருத்தி திணைக்களம் (பொதுத் திறைசேரியின் பிரதிநிதி) |
| திரு.கே.மல்லிமாராச்சி | முன்னாள் தலைவர் (FCCISL இல் பிரதிநிதி) |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | செயலாளர், பணிப்பாளர் / பிநிதி அதிகாரி SLAB |

# SLAB - ஸ்தாபக அமைப்பு




*** பதவி வெற்றிடமாகவுள்ளது**

## செயற்பாடுகளின் முகாமைத்துவம்

இலங்கை தராதர அங்கீகார சபையின் முகாமைத்துவ நடவடிக்கைகள் அனைத்தும் பணிப்பாளர் / பி.நி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஸ்தாபக அமைப்பில் தெரிவிக்கப்பட்டவாறு சபையின் சகல நிறைவேற்று நடவடிக்கைகளுக்கும் தொழில்நுட்ப, நிதி, நிருவாக ஊழியர்களின் அனுசரணையுடன் பணிப்பாளர் / பி.நி.அ பொறுப்பாக உள்ளார்.

## குழுக்கள்

ஆளுநர் சபைக்கும், முகாமைத்துவத்திற்கும் வழிகாட்டி, ஆலோசனை வழங்கவும், இலங்கை தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகள், கடமைகளை நிறைவேற்றவுமென, சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்ற கீழ்க்காணும் தொழில்நுட்பக் குழுக்களை ஆளுநர் சபை நியமித்துள்ளது.

**கொள்கை ஆலோசனைக் குழு**

கொள்கை ஆலோசனைக் குழு, இலங்கை தராதர அங்கீகார சபையின் பலதரப்பட்ட துறைகளினதும் அபிவிருத்தி மற்றும் தராதரத் திட்டங்களின் செயற்பாடு என்பன சம்பந்தமான கொள்கை விடயங்களில் ஆளுநர் சபைக்கு ஆலோசனை வழங்குகிறது.

**தரார அங்கீகாரக் குழுக்கள்**

சம்பந்தப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்குவதிலும், ஒத்தியல்பு மதிப்பீடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அங்கீகரிப்பதிலும் கீழ்க்காணும் தராதர அங்கீகாரக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

1. பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
2. மருத்துவ ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
3. சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு
4. பரிசோதனை அமைப்புக்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு

**தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள்**

சம்பந்தப்பட்ட கடமைகளினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்களில் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பை கீழ்க்காணும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் கொண்டுள்ளன:

1. இரசாயனப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
2. உயிரியல் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
3. இயந்திரவியல் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
4. வைத்தியப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
5. சேதனச் சான்றிதழ் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
6. சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
7. உணவுப் பாதுகாப்பு சான்றிதழ் மற்றும் சோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
8. வாகனங்களின் புகை வெளியேற்றப் பரிசோதனை பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
9. தர முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
10. சூழல் முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
11. பசுமை இல்ல வாயு (GHG) சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக்குழு

**நிபுணத்துவக் குழுக்கள்**

இவற்றுக்கு மேலதிகமாக, உயிரியல் இரசாயனம், heamatotogy, நுண்ணுயிரியல், நுண்திசு நோய் இயல் (histopathology) தரப்படுத்தல், மருத்துவம் சம்பந்தமான பொருட்கள் மற்றும் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்கல், NDT பரிசோதனை மற்றும் ஆய்வு ஆகிய துறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களுக்கு உதவவென, நிபுணத்துவக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

கொள்கை ஆலோசனைக் குழு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு என்பனவற்றின் அமைப்பு விபரங்கள் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

## மனித வளம்

SLAB யின் மனித வள அமைப்பில் சிறியளவிலான உள்ளக ஊழியர் குழுவும், கல்வி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பட்ட தொழில்திறன் நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பாளர்களைக் கொண்ட பாரியளவிலான அமைப்பும் அடங்கும்.

நிறுவனங்களின் ஒத்தியல்பு மதிப்பீட்டின் தரத்தை உறுதி செய்வதே SLAB யின் கடமையாகும். ஆரம்ப காலத்தில் இருந்தே SLAB ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக, சபையின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அதேசமயத்தில், ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, ஏனைய வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்களுக்கு சமமாக SLAB யும் அதன் தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. சாதாரணமாக, புதிதாக சேர்ந்து கொண்ட அதிகாரி ஒருவர், சம்பந்தப்பட்ட துறையில் தகைமை பெறுவதற்கு குறைந்தது மூன்று வருடங்கள் தேவைப்படும்.

## SLAB ஊழியர்கள்

2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபையில் கடமையாற்றிய ஊழியர்களின் விபரம் பின்வருமாறு:

| பதவி | அங்கீகாரம் | நியமனம் | (வெற்றிடம்) |
|---|---|---|---|
| பணிப்பாளர் / பி.நி.அ | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் | 01 | -- | (01) |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (தராதர அங்கீகாரம்) | 10 | 08 | (02) |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) | 01 | 01 | - |
| கனிஷ்ட முகாமையாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) | 02 | - | (02) |
| முகாமைத்துவம் / கணக்கியல் உதவியாளர் | 04 | 04 | - |
| சாரதிகள் | 02 | 02 | - |
| அலுவலக உதவியாளர்கள் | 02 | 02 | - |

## மதிப்பீட்டாளர் குழு

பலதரப்பட்ட துறைகளின் நடவடிக்கையில் தராதர அங்கீகாரத் திட்டச் செயற்பாட்டில் SLAB சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துமும், பயிற்சியும் பெற்ற மதிப்பீட்டாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. SLAB ஊழியர்களுடன் கடமைகளைப் பொறுப்பேற்கவென, 190 பயிற்சிபெற்ற வெளிவாரி மதிப்பீட்டாளரைக் கொண்ட குழுவொன்று இதற்கென அமைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான கடமையைப் பொறுப்பேற்க முன்னர், அதற்கான தகைமைகளைப் பெறவென குறிப்பிட்ட துறையில் பயிற்சி பெற்று நிபுணத்துவமும் அடைந்திருப்பது அவசியமாகும். தராதர அங்கீகாரச் சேவையின் தேவைகளின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் SLAB மதிப்பீட்டாளர் குழுவை விஸ்தரிக்கவென நான்கு மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

2014 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் SLAB மதிப்பீட்டாளர் குழுவின் விபரங்கள் வருமாறு:

| தராதர அங்கீகாரத் துறைகள் | தலைமை மதிப்பீட்டாளர்கள் | தொழில்நுட்ப மதிப்பீட்டாளர்கள் | பயிற்சி பெறும் மதிப்பீட்டாளர்கள் |
|---|---|---|---|
| பரிசோதனை | 03 | 25 | 38 |
| தரப்படுத்தல் | 01 | 05 | 06 |
| மருத்துவப் பரிசோதனை | 01 | 17 | 40 |
| சான்றிதழ் வழங்கல் - வழிமுறைகள் | 03 | 08 | 18 |
| சான்றிதழ் வழங்கல் - பொருட்கள் | -- | 04 | 27 |
| சான்றிதழ் வழங்கல் - நபர்கள் | -- | 02 | 02 |
| பரிசோதனை | 01 | 01 | 42 |
| GHG பரிசோதனை | -- | -- | 22 |
| GLP | -- | -- | 23 |
| மொத்தம் | 09 | 62 | 218 |

## நடவடிக்கைகள்

### ISO/IEC 17011 க்கு உட்பட்ட SLAB தராதர அங்கீகார நடவடிக்கைகளின் முகாமைத்துவமும் செயற்பாடும்

SLAB யின் முக்கிய நடவடிக்கை ISO/IEC 17011: 2004 க்கும், சர்வதேசக் கொள்கைகளுக்கும் அமைவான வழிமுறைகள், வழிகாட்டி நெறிகள் என்பனவற்றின் அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டங்களை நடைமுறைக் கிடுவதாகும். SLAB யினால் நடத்தப்படும் முக்கிய தராதர அங்கீகாரத் திட்டங்களின் விபரங்கள் வருமாறு:

1. ISO/IEC 17025 யின் அடிப்படையிலான பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
2. ISO/IEC 17025 யின் அடிப்டையிலான ஆய்வுகூட தரப்படுத்தலுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
3. ISO 15189 அடிப்படையிலான மருத்துவ ஆய்கூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
4. ISO/IEC 17021 இன் அடிப்படையிலான வழிமுறைகளுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்
5. ISO/IEC 17065 இன் அடிப்படையிலான உற்பத்திப் பொருட்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்.
6. ISO/IEC 17024 அடிப்படையிலான நபர்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புகளுக்கான தராதர அங்கீகார திட்டம்
7. ISO/IEC 17020 அடிப்படையிலான பரிசோதனை அமைப்புக்களுக்குரிய தராதர அங்கீகாரத் திட்டம்

2014 ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முகாமைத்துவ வழிமுறைகளை மேற்கொள்ளவும், மேம்படுத்தவும் SLAB நடவடிக்கை மேற்கொண்டது. ISO 15183 மற்றும் தரப்படுத்தல் உட்பட்ட பரிசோதனையில் APLAC / ILAC MRA யை தொடர்ந்து வைத்திருப்பதில் SLAB வெற்றி கண்டது. QMS, EMS என்பனவற்றுக்கான PAC/IAF MLA -மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் என்பன சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டில் SLAB அனுமதிக்கப்பட்டது. FSMS சான்றிதழுக்கென PAC MLA யினால் SLAB 2014 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டது. அதேவேளை, பரிசோதனைக்கென APLAC MRA இடம் SLAB விண்ணப்பித்துக் கொண்டது.

**பரிசோதனை ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்**

ISO/IEC 17025:2005 அடிப்படையிலான பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட தராதர அங்கீகாரம் SLAB யினால் வழங்கப்படும் தராதர அங்கீகார சேவைகளில் பெரும்பாலான இடத்தை வகிக்கிறது. தேவையற்ற தொழில்நுட்பத் தடைகளை விலக்கவும், நம்பகமான பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் துறையினருக்கு உதவி வழங்கவுமென, பரிசோதனை ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரத்தில் 2014 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது.

இந்த வருடத்தில் ஒன்பது (09) புதிய தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டதை அடுத்து, மொத்தமாக நாற்பத்து ஐந்து (45) தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆறு (06) புதிய விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தராதர அங்கீகாரத் திட்டத்தின் அடிப்படையில் இருபத்தியொரு (21) கண்காணிப்பு மதிப்பீடுகளும், ஆறு (06) மீள் மதிப்பீடுகளும் திட்டமிட்டபடி இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. உணவு மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள், மண், சீமெந்து மற்றும் கொங்றீட், புடவை வகைகள், உரம், கால்நடைப் பரிசோதனை போன்ற துறைகளில் தராதர அங்கீகாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

**தரப்படுத்தல் ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரம்**

ISO/IEC 17025:2005 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைவாக இருந்த போதிலும், பரிசோதனை மேற்கொள்ளும் ஆய்வுகூடங்கள் நம்பகமான பெறுபேறுகளை வழங்குவதற்கும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவைகள், தரங்கள் என்பனவற்றைப் பரப்புவதற்குமென பலமான வளிமண்டல உட்கட்டமைப்பு தேவைப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அதிக எண்ணிக்கையான தரப்படுத்தல் ஆய்வுகூடங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தராதர அங்கீகாரம் பெற்ற ஓத்தியல்பு மதிப்பீட்டு ஆய்வு கூடங்களின் எண்ணிக்கை நான்கு (4) ஆகும். ஒரு (1) புதிய விண்ணப்பமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. புதுப்பித்தலுக்கென ஒரு (1) விண்ணப்பமும், கண்காணிப்பு மதிப்பீட்டிற்கென மூன்று (3) விண்ணப்பங்களும்

பெற்றுக் கொள்ளப்படடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தரப்படுத்தல் ஆய்வில் பொருட்களின் திண்மம், வெப்பதட்ப நிலை, நீளம், காலப் பிரமாணம், தொகை, அழுத்தம் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன.

**மருத்துவ ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்**

மருத்துவ ஆய்வுகூடங்களின் ISO 15189 அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டம், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள், தரங்களுக்கு உட்பட்ட வகையில், சகல மதிப்பீட்டு வழிமுறைகளுக்கும் உட்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது. 2014 ஆம் ஆண்டிலும் அரசாங்க மருத்துவ ஆய்வுகூடங்களில் தரமான முகாமைத்துவ வழிமுறைகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக காண்பிக்கப்பட்ட அக்கறை மிகவும் சொற்பமாகும்.

மருத்துவ ஆய்வுகூடச் சேவையாளரின் தகைமையை மேம்படச் செய்யவும், வழமையான பரிசோதனைகள், விசேட பரிசோதனைகள், அதியுயர் பரிசோதனைகள் ஆகிய மூன்று (3) அடிப்படைக் குழுக்களின் கீழ் மேற்குறிப்பிட்ட துறைகளிலான மருத்துவப் பரிசோதனைகளை தரப்படுத்தவும், உயிரியல், இரசாயனம், நுண்ணுயிரியல் உட்பட நான்கு துறைகளைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நான்கு நிபுணத்துவக் குழுக்கள், தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டன.

ISO 15189 அடிப்படையில் பதினான்கு (14) மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஒரு (01) புதிய விண்ணப்பம் சம்பந்தமாகவும், இரண்டு (2) மீள் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் பற்றியும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு (2) முன் மதிப்பீடுகள், பதினொரு (11) கண்காணிப்பு மதிப்பீடுகள், இரண்டு (2) மீள் மதிப்பீடுகள், இரண்டு (2) பூர்வாங்க மதிப்பீடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

**சான்றிதழ் அமைப்புகளுக்கான தராதர அங்கீகாரம்**

தராதர அங்கீகார சான்றிதழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் நேரடியாக அனுசரனை வழங்குவதனால், சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரம் என்பது SLAB மிகுந்த அக்கறை செலுத்தும் மற்றுமொரு துறையாகும். ஆய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வழிமுறைகள், சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC 17021 மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC வழிகாட்டி 17065, ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கல் ISO/IEC 17024 என்பனவற்றின் அடிப்படையில் தராதர அங்கீகாரத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச் சட்டத்தின் iv ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிப்படும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2015 ஏப்ரல் 09 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்யிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும், நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும், வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக, நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தாப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி, சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும், முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பனவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (03) ஆம் மற்றும் (04) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் ஆண்டினுள் காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் என்பன பிரதிபலிக்கப்படும் வகையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பின்வரும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(i) திறைசேரியிடமிருந்து மானியமொன்றுக்காக ஆண்டினுள் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 8,150,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பெறுமதி காசுப் பெறுவனவாகவும், அது கொள்வனவு ஒன்றாகக் கருதி காசு வெளிப்பாய்ச்சலாகவும் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 25(உ) மற்றும் (ஊ) பிரிவுகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடர் கடன் ரூபா 175,000 தொகை மற்றும் அறவிடப்பட்ட இடர்கடன் ரூபா 319,100 தொகை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளில் வெவ்வேறாகக் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07

நிதிக் கூற்றுக்களில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு, எனினும், தற்போது சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 3,710,570 பெறுமதியான சொத்துக்களை மீள் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பணிக்கொடை ஒதுக்கீட்டிற்காக சபையினால் பின்பற்றப்பட்ட கொள்கை கணக்குகளுடன் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச் சட்டம் | |
| (i) 3(ஈ) பந்தி | சபையின் செயற்பாடொன்றான மதிப்பீட்டாளர்களைப் பயிற்சியளிப்பதன் ஊடாக உழைக்கப்பட்டிருந்த ரூபா 427,500 வருமானத்தில் அரச இறையாக 10 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டு மிகுதி உத்தியோத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) 7(ஆ) பந்தி | சபைக்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் தம்மால் ஏதாவது உரித்தொன்று அல்லது நலனொன்று பெற்றுக் கொள்ளப்படுமானால், அந்நபர் நிர்வாக சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு தகைமையற்றவராக இருந்த போதிலும், ரூபா 24,000 மதிப்பீட்டுப் படியொன்றைப் பெற்றுக்கொள்ளும் |

| | |
|---|---|
| | நபரொருவர் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) XV ஆம் அத்தியாயத்தின 10.2 ஆம் பிரிவு மற்றும் 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய MOFP/01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றறிக்கையின் 2(i) ஆம் பிரிவு | சபையின் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்காக சமூகமளிக்கும் போது பிரதமரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், குறித்த சுற்றுலாவின் பின்னர் தனிப்பட்ட சுற்றுலாக்களில் ஈடுபட்ட காரணத்தினால் அதற்காக சபையின் நிதியத்திலிருந்து ரூபா 109,691 தொகை செலவிடப் பட்டிருந்தது. |
| (ii) XV ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பந்தி | எதுவித பிணைப் பொறுப்பொன்றையும் பெற்றுக் கொள்ளாமல் தகுதிகாண் காலப் பகுதியிலுள்ள 03 உத்தியோத்தர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாவில் பங்குபெறச் செய்யப்பட்டிருந்தனர். |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.2 ஆம் பிரிவு | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளில் நிதி விளைவுகள் ஒப்பிடக்கூடிய முறையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) 8.3.3 ஆம் பிரிவின் (ஈ) பந்தி | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது 2014 ஆம் ஆண்டின் போது செயலாற்றல் அடிப்படையில் ஊக்குவிப்புப் படி கொடுப்பனவிற்காக ஒருவருக்கு ரூபா 15,000 வீதம் 17 பேருக்கு ரூபா 255,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. |
| (iii) 9.14.2 ஆம் பிரிவு | திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தில் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக அலுவலகக் கைந்நூல் ஒன்று யூலை 01 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2013 சனவரி 15 ஆம் திகதிய 01/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொது முயற்சிகளில் உயர்மட்ட முகாமைத்துவத் தரங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் போது ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான பதிலாள் ஒருவரை திட்டமிடுவது நிருவாக சபையின் பொறுப்பு ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை தராதர அங்கீகார சபை, மேலதிக பணிப்பாளர் II மற்றும் 2015 யூன் மாதத்தில் வெற்றிடமான தலைவர் பதவிக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய நிதி, திட்டமிடல் நி.தி. 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | சபையின் உத்தியோகத்தர்கள் கல்வி / பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது வெளிநாட்டு நிறுவனங்களினால் சில வசதிகளை வழங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் மேலதிகமாக ரூபா 172,628 தொகை பிழையான முறையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 03. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் நிதி விளைவு ரூபா 4,936,649 மிகையொன்றாக இருந்ததுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 59,633 மிகையாக இருந்தமையால், நிதி விளைவுகளில் 4,877,017 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. மீளாய்வாண்டின் போது தராதர அங்கீகார வருமானம் 59 சதவீதத்தினாலும், பயிற்சி நிகழ்ச்சித் திட்ட வருமானம் 31 சதவீதத்தினாலும் அதிகரித்தமை இந்நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்குப் பிரதான காரணங்களாக இருந்தன.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தராதர மேம்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தராதர மேம்படுத்தல் தொடர்பாக மீளாய்வாண்டில் 16 பரிசோதனை கூடங்களுக்காக புதிய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல், 01 விசேட நிபுணத்துவ இயலுமையுடைய வழங்கல் நிறுவனத்துடன் (Proficiency Service Providers) புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் மற்றும் 08 வைத்திய ஆய்வுகூடங்களில் தராதரங்களைப் புதுப்பித்தல் மற்றும் 06 ஆய்வுகூடங்களுக்காக புதிய தராதரங்களை வழங்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 07 ஆய்வுகூடங்களுக்காக விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளல், 03 வைத்திய ஆய்வுகூடங்களின் தராதரங்களைப் புதுப்பித்தல் மற்றும் 01 ஆய்வுகூடத்திற்கு புதிய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) தராதர அங்கீகாரம் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுவதற்காக மீளாய்வு ஆண்டின் போது இலத்திரணியல் ஊடகங்களுக்கு 02 சமர்ப்பணங்களையும், அச்சீட்டு ஊடகங்களுடன் 02 கலந்துரையாடல்களையும் மேற்கொள்வதற்கு முன்னைய ஆண்டினைப் போன்றே மீளாய்வு ஆண்டிற்காகவும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 02 ஆண்டுகளின் போதும் 01 ஊடக கலந்துரையாடல் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஆ) தராதர சேவைகளை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவகத்தின் பிரதான செயற்பாடான தராதரங்களை வழங்குவதன் கீழ் 13 பரிசோதனைக் கூடங்கள், 04 மருத்துவ நிலையங்கள், நிறுவனங்கள், பரிசோதனை நிறுவனங்கள், சான்றுறுதிப்படுத்தும் நிறுவனங்கள் (உற்பத்தி, முறைமை மற்றும் ஆட்கள்) வகையின் கீழ் நிறுவனம் வீதம் தராதரப்படுத்துவதற்கு மீளாய்வு ஆண்டில் இலக்காக இருந்தது. இதில் 9 பரிசோதனைக் கூடங்கள் மற்றும் 03 மருத்துவ நிலையங்கள் மாத்திரம் தராதரப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) இயலுமை மேம்படுத்தலின் கீழ் 100 மதிப்பீட்டாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 70 பேர் மாத்திரமே பயிற்சி அளிக்கப்பட்டிருந்தனர்.

(iii) மீளாய்வாண்டினுள் 04 செயலாற்றல் புலனாய்வுகள் இலக்காக இருந்த போதிலும் அதில் 50 சதவீதம் மாத்திரமே நிறைவேற்றக்கூடியதாக இருந்தது.

(iv) சர்வதேச அங்கீகாரத்தின் கீழ் 04 சர்வதேச நிறுவனங்களின் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(v) நிறுவகத்தின் தலைமை அலுவலகத்தினால் ரூபா 08 மில்லியன் வருமானத்தை உழைத்தல் இலக்காக இருந்த போதிலும், அதில் 68 சதவீதம் அளவில் மாத்திரமே சம்பாதிக்கப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தராதரங்களுக்காக விண்ணப்பிப்பதற்கான மார்க்கமான கணனி முறைமைக்காக 2015 மார்ச் மாதம் வரையிலும் எதுவித விண்ணப்பமும் கிடைத்திருக்கவில்லை. அதற்காக 2011 மார்ச் 10 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் வரை ரூபா 1,557,751 தொகை சேவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தன. இந்த மென்பொருளில் காணப்பட்ட குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றின் உத்தியோகத்தர் ஒருவருக்கு 06 மாத காலப்பகுதிக்காக ரூபா 30,000 படியில் பணிப் பொறுப்பளித்தல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கனடாவில் நடைபெற்ற வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றுக்காக பங்குபற்றிய வெளி நபர் ஒருவரின் விசாக் கட்டணமாக ரூபா 11,345 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீண்டெழும் செலவினை விடயத்திற்குரிய நிகழத்தக்க பொறுப்புக்களை ஈடு செய்யக்கூடிய வகையில் ஒதுக்கத்தின் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினரை ஒப்பிடும் போது நான்கு பதவிநிலைத் தரங்களில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) சபையின் மேலதிகப் பணிப்பாளர் பதவி, பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட தினத்திலிருந்து வெற்றிடமாக இருந்து வருவதுடன், அதற்காக உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு அவ்வப்போது பத்திரிகை அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பத்திரிகை அறிவித்தல் வெளியிடுவதற்காக ரூபா 123,536

தொகை செலவினமொன்றாக செய்யப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 நவம்பர் மாதத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் வெற்றிடமாக இருந்ததுடன், இச்செயற்பாட்டிற்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 நவம்பர் வரை பதில் கடமை புரியும் வகையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு அவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 8,000 வீதம் படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 02 பதவிகள் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான ஆட்சேர்ப்பு 2015 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் சபையின் எதிர்பார்த்த நோக்கத்தை மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டிற்காக மீண்டெழும் செலவின பாதீட்டு மதிப்பீடு ரூபா 38 மில்லியனாக இருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் உள்ளபடியான செலவினம் ரூபா 43 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை விஞ்சி 13 சதவீதம் செலவு செய்யப்பட்டமையால், சபையின் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பதவியணியினர் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

අනුකූලතා තක්සේරු පිළිබඳ ශ්‍රී ලංකා ප්‍රතීතන මණ්ඩලය
ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை
Sri Lanka Accreditation Board for Conformity Assessment

නො. 546/4, ගාලු පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව.
இல 546/4, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
No. 546/4, Galle Road, Colombo 03, Sri Lanka.

2015 மே 14
கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்,
306/72 பொல்துவ வீதி,
பத்தரமுல்ல

**2014 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(உ) அறிக்கையின் அடிப்படையிலான தலைவரின் கருத்துக்கள்**

**2.2 நிதி அறிக்கைகளின் மீளாய்வு**

**2.2.1 இலங்கை அரசதுறை கணக்கியல் தரங்கள்**

a. இலங்கை அரசதுறை கணக்கியல் தரம் இல. 02

(i) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது
(ii) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(b) கணனியும் அதனுடன் இணைந்த உபகரணங்களும் ரூபா 2,208,829. தளபாடங்கள் ரூபா 999,011, குளிரூட்டி இயந்திரம் ரூபா 239,510, தொலைபேசி, போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணங்கள் ரூபா 263,220 என்பன மதிப்பிறக்கச் சொத்துக்களின் கீழ் உள்ளன. இவை அனைத்தும் பழுதுபார்க்கப்பட்டு உபயோகிக்கப்பட்ட போதிலும், அவற்றுக்கு பொருளாதார அடிப்படையிலான கால எல்லை கிடையாது. எனவே, இத்தகைய சிறிய உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்து, கணக்குப் புத்தகங்களில் காண்பிப்பதன் காரணமாக, நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பராமரிப்பதில் பிரச்சினைகள் எழக்கூடும். தளபாடங்கள் என்பன MDF சபை மீள் மதிப்பீட்டின் பெறுமதியைக் கொண்டிருப்பதனால், அவற்றின் பெறுமதி மிகவும் சொற்பமாகும். பழைய கணனிகள் வெகு விரைவில் கைவிடப்படவிருக்கின்றன. எனவே, நியாயமான பெறுமதியைக் கொண்டுள்ள பொருட்கள் சம்பந்தமாகவே இந்தத் தரத்தை உபயோகிக்க முடியும். அதேசமயத்தில், உபயோகிக்க முடியாத மற்றும் திருத்தி பாவிப்பதில் பெறுமதியற்ற உபகரணங்களை அட்டவணையில் இருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2.2.2 கணக்கியல் கொள்கைகள்**

பணிக்கொடைக் கொடுப்பனவு சம்பந்தமாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைக்கு உட்பட்ட வகையிலேயே பணிக்கொடை எற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென இலங்கை வங்கியில் நிலையான வைப்புக் கணக்கு ஒன்றின் மூலம் நிதியமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்பாடு மற்றும் நிதியின் போதிய தன்மை என்பனவற்றின் அடிப்படையில் முதலீட்டுத் தொகை தீர்மானிக்கப்படும்.

**2.3(a)(i) மதிப்பீட்டாளர்களுக்கான பயிற்சி ஐந்து நாள் நீடிக்கும் விசேடமான திட்டமாகும்.**

இந்தத் திட்டத்திற்கான வளவாளர்களைத் தேர்ந்தெடுப்பது மிகக் கஷ்டமான விடயமாகும். எனவே, இலங்கை தராதர அங்கீகார சபையின் அதிகாரிகளே மேலதிக நடவடிக்கையாக இந்தத் திட்டத்தில் பங்குபற்றுகின்றனர். இது ஒரு விசேட நடவடிக்கை என்பதனால், ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் இதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மாற்று நடவடிக்கையாக வெளிநாடுகளில் இருந்து வளவாளர்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(ii) சபையின் ஒரு அங்கத்தவர் மதிப்பீட்டாளர் குழுவிலும் இடம்பெற்றுள்ளார். புடவைக் கைத்தொழில் விடயத்தில் அவர் ஒரு நிபுணராவார். புடவைக் கைத்தொழில் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இல்லாததனால் அவரது சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதி அறிக்கையில் குறிப்பு என்ற வகையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(b)(i) இலங்கை தராதர அங்கீகார சபையின் அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு அதிகாரி தமது பயிற்சித் திட்டம் முடிவடைந்ததும் அவரது சகோதரரை சந்திக்கவென அவுஸ்திரேலியா சென்றுள்ளார். அவரது இந்த அவுஸ்திரேலிய பயணம் பற்றி அங்கீகாரத்திற்கென அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், எந்தவித ஆட்சேபனை அல்லது விளக்கம் எதுவும் கோரப்படவில்லை.

வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கெனச் செல்லும் பயிற்சியாளர்களுக்கு அவர்களது பயிற்சித் திட்டத்தில் மதியபோசனம் மற்றும் இராப்போசனம் என்பனவற்றுக்கான செலவு உள்ளடக்கப்படாத சமயத்தில், உணவுச் செலவினங்கள் வழங்கப்படுவது வழக்கம். இந்தக் கொடுப்பனவும் ஆளுநர் சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வழங்கப்பட்டுள்ளது.

(ii) வெளிநாட்டில் பயிற்சிக்கென சென்ற நிரந்தரமற்ற ஊழியர்கள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

(c)(i) மூலதனச் செலவினம் சம்பந்தமான நிதி முன்னேற்ற அறிக்கை தவணை அடிப்படையில் தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. தராதர அங்கீகார நடவடிக்கைகள் படிவத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.

(ii) திறைசேரியில் இருந்து மீள் செலவின தொகை பெறப்படுவதைத் தவிர்க்கவென வருமானத்தை துரிதமாக அதிகரிக்கும்படி ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த இலக்கை ஊழியர்கள் அடைவதற்கென வருடாந்த போனஸ் தொகையான ரூபா 15,000/- வழங்கப்படும் என்ற விடயம் ஊழியர்களுக்கு நன்கு தெரியும். இதற்கு மேலதிகமாக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் 05/2014 என்ற இலக்கத்தைக் கொண்ட சுற்று நிருபமும் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்று நிருபத்தை அடிப்படையாகக் கொண்டு போனஸ் கொடுப்பனவை அங்கீகரிக்கும்படி வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பிட்ட இந்தச் சுற்று நிருபம் இலங்கை தராதர அங்கீகார சபைக்குப் பொருத்தமானதல்ல எனத் தெரிவித்து ஊழியர்களுக்கான ஊக்கத் திட்டம் ஒன்று பற்றி ஆலோசிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளது. அரசாங்கமும் அதிகாரிகளும் மாற்றமடைந்ததனால் இந்த விடயம் தொடர்பான நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன. இதுபற்றி ஆராயவென நிதி அமைச்சில் 2015.05.21 ஆம் திகதி கூட்டம் ஒன்று நடைபெற்றதை அடுத்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

03. இலங்கை தராதர அங்கீகார சபையின் அலுவலக கையேடு தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் அரச நிறுவனங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை எத்தகைய அங்கீகாரமும் கிடைக்கவில்லை. கையேட்டை மீளாய்வு செய்வதற்கென அரச நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளருடன் 2015.08.27 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. இதனை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

(d) செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்களுக்கு மேலதிகமாக அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் பொருத்தமான அதிகாரி ஒருவரை தெரிவு செய்வதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்த போதிலும், தரம் சம்பந்தமான தராதர அங்கீகாரம் பற்றிய அனுபவம் கொண்ட அதிகாரிகள் இல்லாதமையினால் இந்த நடவடிக்கையும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இலங்கை தராதர அங்கீகார சபை ILAC, APLAC மற்றும் PAC என்பனவற்றில் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளது. எனவே, இலங்கை தராதர அங்கீகார சபையின் தராதர அங்கீகாரம் சர்வதேச அங்கீகாரம் பெற்றதாகும். இந்த அமைப்புக்களில் அங்கத்துவத்தை தொடர்ந்து நீடிப்பதற்கு தராதர அங்கீகாரத்தில் தகைமைபெற்ற அதிகாரிகள் தேவை. எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவென தகைமையையும் அனுபவத்தையும் குறைப்பது தீர்வாக அமைய மாட்டாது. பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி வருட நடுப்பகுதியளவில் ஓய்வில் செல்ல இருப்பதனால், இந்த விடயம் தொடர்பாக கடிதம் ஒன்று தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் கோரப்பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு இது பற்றிய அமைச்சரவைப் பத்திரத்தை தற்சமயம் தயாரித்து வருகின்றது.

## 3. நிதித்துறை மீளாய்வு

### 3.1 நிதித்துறைப் பெறுபேறுகள்

கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாடு

(a) தராதர அங்கீகார அபிவிருத்தி

(i) தராதர அங்கீகாரத்திற்கென விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல், நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் தரத்தில் தங்கியுள்ளது. தராதர அங்கீகாரம் கட்டாயமானதல்ல என்பதனால், விண்ணப்பங்களின் பெறுகையிலும் பாதிப்பு ஏற்படும்.

(ii) இத்தகைய பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் குறிப்பிட்ட எண்ணிக்கையை மதிப்பிடுவது என்பது இயலாத விடயம்.

(b) தராதர அங்கீகார சேவை வழங்கல்

(i) தராதர அங்கீகாரம் என்பது சுயமாக ஏற்படுத்திக்கொள்ளும் வழிமுறை என்பதனால் சமூகத்தின் தேவையின் அடிப்படையில் இதற்கான கோரிக்கைகள் தங்கியிருக்கும். எனவே, குறிப்பிட்ட இலக்கை அடைவது என்பது கஷ்டமான விடயம்.

(ii) பயிற்சித் திட்டத்திற்கான பயிற்சியாளர்களின் எண்ணிக்கையின் முன்மொழிவு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருக்காது போகலாம்.

(iii) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது

(iv) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது

(v) இலங்கை தராதர அங்கீகார சபையின் முக்கிய வருமானத்தின் மதிப்பீடு 100% இலும் பார்க்க அதிகரித்துள்ளது.

### 4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

(a) தராதர அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்களின் பெறுகையை இலகுவாக்கவென ஒன்லைன் (வழிவரு) வழிமுறை சுவீடிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. சில குறைபாடுகள் காரணமாக ஒன்லைன் வழிமுறை உபயோகிக்கப்படாதிருந்ததனால் அது செயற்படவில்லை. இலங்கை தராதர அங்கீகார சபை வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் தராதர அங்கீகார சேவைகளை

வழங்குவதனால் இந்த ஒன்லைன் வழிமுறை தொடர்ந்து மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

இந்த ஒன்லைன் திட்டத்தைப் பகுப்பாய்வு செய்து தரமுயர்த்துவதற்கான தகுதிவாய்ந்த அதிகாரி எவரும் இலங்கை தராதர அங்கீகார சபையில் இல்லை. கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவிலிருந்து பொருத்தமான ஒரு நிபுணரை தருவிப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. இந்தச் சமயத்தில் ஆளுநர் சபையின் ஆலோசனையுடனும் இந்த ஒன்லைன் வழிமுறையை வழங்கிய நிறுவனத்தின் பரிந்துரையுடனும் நிபுணர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். இதனையடுத்து தற்சமயம் இந்த வழிமுறை வெற்றிகரமாக இடம்பெற்று வருகிறது. எனவே, இது நிரந்தரமான அல்லது ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் அல்ல.

(b) கனேடிய சுற்றுலாவுக்கான விசா கட்டணமான ரூபா 45,382.02 என்பது, இரண்டு நபர்களுக்கென சம்பந்தப்பட்ட அதிகாரியினால் செலுத்தப்பட்டது. இதில் அவரது பங்கான ரூபா 22,691.01 மாத்திரமே அதிகாரிக்கு மீள வழங்கப்பட்டுள்ளது.

(c) இலங்கை தராதர அங்கீகார சபையின் கணக்குகளை கணக்காய்வு செய்த சமயம் APLAC-PAC யினாலும் இந்தத் தேவை பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**4.3 ஊழியர் நிர்வாகம்**

(a) வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுகின்றன.

(b) அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், குறிப்பிட்டதொரு அதிகாரியை அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்வதற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டன. தரம் மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பான அனுபவங்களைக் கொண்ட அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் இந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவென, தகைமை மற்றும் அனுபவக் குறைப்பு என்பது ஒரு தீர்வாக இருக்க மாட்டாது. ILAC, APLAC, PAC என்பனவற்றின் அங்கத்துவத்தை இலங்கை தராதர அங்கீகார சபை பெற்றுள்ளதனால், SLAB தராதர அங்கீகாரம் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் அறிவும் அனுபவமும் வாய்ந்த உயர்தர அதிகாரிகள் SLAB யில் இடம்பெற்றிருப்பது அவசியமாகும். இந்த வருட நடுப்பகுதியளவில் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஓய்வில் செல்லவுள்ளதனால், இது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கையை எடுக்கும்படி தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் சேவைகளை நீடிக்கக் கோரும் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

(c) உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கான அங்கீகாரம் 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட போதிலும், நிரந்தர பதவிக்கான போதிய வேலைப்பழு இல்லாத காரணத்தினால் இந்த வேலைகளை தகைமை வாய்ந்த மற்றுமொரு அதிகாரி மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்ற கருத்து, ஆளுனர் சபையின் எண்ணமாக இருந்தது. இருந்த போதிலும், 2014.08.22 இல் கூடிய COPE அமைப்பு, கணக்காய்வாளர் ஒருவரை நிரந்தர அடிப்படையில் நிஜயமிக்குமாறு பரிந்துரை செய்தது. இதற்கு மேலதிகமாக கணக்குகள் மற்றும் நிர்வாகத் துறைகளுக்கான கனிஷ்ட முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கான அங்கீகாரமும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது. பதவி வெற்றிடம் சம்பந்தமாக விளம்பரம் செய்வதற்கு நாம் தயாராகியதும், ஜனாதிபதி தேர்தலுக்கான பிரகடனம் விடுக்கப்பட்டது. இதனையடுத்து, இந்த விளம்பரத்தை வெளியிடுவதற்கான அனுமதி, 2014.12.27 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டது. செய்திப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட அதேசமயம், ஆளுநர் சபை கலைக்கப்பட்டு புதிய ஆளுநர் சபை 2015 மார்ச் மாத இறுதியளவில் நியமிக்கப்பட்டது.

(d) இதற்கான விளக்கம் குறிப்பு ‘C’ யின் கீழ் தரப்பட்டுள்ளது.

**05. கணக்கியல் தன்மையும் சிறந்த ஆளுமையும்**

**5.1 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

மொத்தச் செலவினம் ரூபா 38 மில்லியனிலும் பார்க்க அதிகரிக்கவில்லை.

திரட்டிய அடிப்படையில் இறுதிக் கணக்கறிக்கையின் பிரகாரம் மொத்தச் செலவினம் ரூபா 43 மில்லியன் ஆகும். இருந்த போதிலும் ரூபா 43 மில்லியனில் மதிப்பிறக்கமும், படிப்படியாக திருப்பிச் செலுத்தப்பட்ட தொகையும் அடங்கியுள்ளன.

**06. வழிமுறைகளும் கட்டுப்பாடுகளும்**

எதிர்கால வழிகாட்டல்களுக்கென கவனத்திற் கெடுக்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ
தலைவர்
இலங்கை தராதர அங்கீகார சபை

## SLAB நிறுவன  இலச்சினை

## SLAB தராதர  அங்கீகார  அடையாளம்

## தராதர அங்கீகாரக் குழு

**சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| திரு.ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ<br>இலங்கை தராதர அங்கீகார சபை |
| டொக்டர் நிர்மாலி டி சில்வா | மன்ற உறுப்பினர், சிரேஷ்ட விரிவுரையாளர், புடவை வகைகள் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| டொக்டர் சரத் அபேவர்தன | பணிப்பாளர், தேசிய விஞ்ஞான மன்றம் |
| திரு. டீ.குணசேகர | தலைவர், உணவு பதனிடுவோர் சங்கம் |
| திரு. கே.எச்.முத்துக்குடாராச்சி | பிரதிப் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| திரு. என்.கே.ஏ.ரூபசிங்க | பிரதிப் பணிப்பாளர், தொழில்நுட்பம், ஏற்றுமதி விவசாய திணைக்களம் |
| திரு. வஜிர பெரேரா | பணிப்பாளர், (NVQ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் |

**இரசாயனப் பரிசோதனை மற்றும் ஆய்வுகூட அளவை மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ<br>இலங்கை தராதர அங்கீகார சபை |
| டொக்டர் நிர்மாலி டி சில்வா | மன்ற உறுப்பினர், சிரேஷ்ட விரிவுரையாளர், புடவை வகைகள் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதீகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எச்.டி.குணவர்தன | இரசாயன விஞ்ஞானத்தில் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| திரு. எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம் |
| கலாநிதி திருமதி இந்திகா அபேகுணவர்தன | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எஸ்.சீ. விஜேரத்ன | ஓய்வு பெற்ற பேராசிரியர்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை |

**மருத்துவ பரிசோதனை ஆய்வுகூடங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| கலாநிதி சுஜாதா மனன்வத்த | ஆலோசகர், நுண் உயிரியல் துறை, தேசிய STD/AIDS நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் |
| டொக்டர் (திருமதி) மாலா எம்.ஜயதிலக | ஆலோசகர், நுண் உயிரியல் துறை, தேசிய புற்று நோய் வைத்தியசாலை |
| பேராசிரியர் (செல்வி) ஜெனிபர் பெரேரா | பேராசிரியர் நுண் உயிரியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| டொக்டர் (திருமதி) எம்.எம்.குணதிலக்க | இரசாயன நோயியில் ஆலோசகர், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் |
| டொக்டர் (செல்வி) கே.சீ.கே.வாசலஆரச்சி | இரசாயன நோயியில் ஆலோசகர், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை |
| கலாநிதி (திருமதி) எம்.என்.துடாவை | சரும நோயியல் ஆலோசகர், டேடர்ன்ஸ் வைத்தியசாலை |
| டொக்டர் (செல்வி) சரோஜா சிறிவர்தன | இளைப்பாறிய இரசாயன நோயியல் ஆலோசகர், தேசிய வைத்தியசாலை, கொழும்பு |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**மேற்பார்வை நிறுவனங்கள் மீதான தராதர அங்கீகாரக் குழு**

| | |
|---|---|
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |
| கலாநிதி ஏ.ஜீ.ரீ.சுகதபால | பணிப்பாளர், இலங்கை செயற்படு ஆற்றல் அதிகார சபை |
| பேராசிரியர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | சிவில் எந்திரவியல் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| டொக்டர் எல்.டீ.ஜே.எப்.நாணயக்கார | சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் தொழில்நுட்ப திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| திரு. ரீ.எஸ்.அமரவங்ச | முன்னாள் உதவிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| டொக்டர் ஜீ.ஏ.எஸ்.பிரேமகுமார | பணிப்பாளர் நாயகம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |
| திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை (செயலாளர்) |

| இரசாயனப் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு | |
|---|---|
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்கப் பகுப்பாய்வாளர், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| திரு. ஆர்.எம்.ஜீ.பீ.ராஜநாயக்க | நகர பகுப்பாய்வாளர், கொழும்பு மாநகர சபை |
| பேராசிரியர் ஆர்.டீ.விஜேசேகர | இரசாயனவியல் பற்றிய பேராசிரியர், இரசாயனவியல் திணைக்களம், பேராதனை பல்கலைக்கழகம் |
| கலாநிதி ஏ.எம்.முபாறக் | முன்னாள் பணிப்பாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம் |
| கலாநிதி எல்.எம்.கே.திலகரத்ன | இரசாயன பரிசோதனைகள் பற்றிய ஆலோசகர் |
| டொக்டர் எஸ்.எஸ்.ஸ்கந்தராஜா | இரசாயனவியல் திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| செல்வி எச்.குமாரதுங்க | பிரதிப் பணிப்பாளர், SLAB |

**உயிரியல் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் (திருமதி) சந்திரானி விஜேரத்ன | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) சீ.எம்.நாணயக்கார | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) எஸ்.ஐ.அபேகுணவர்தன | நுண் உயிரியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| திருமதி எச்.ஜீ.ஜீ.சூரியாராச்சி | பணிப்பாளர், உற்பத்திச் சான்றிதழ், SLSI |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**இயந்திரப் பரிசோதனை, அளவீடுகள் மற்றும் அளவை திருத்தல் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதீகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | சிவில் எந்திரவியல் திணைக்களம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் |
| திரு.எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம், MUSSD |
| திரு.எச்.பீ.என்.ஜே.குணசேகர | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நட்ப சேவைகள்), ITI |
| திரு. எஸ்.என்.நைல்ஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திருமதி என்.டீ.ஜீ.விஜேசிறிவர்தன | பிரிவுத் தலைவர், மின் மற்றும் இலத்திரனியல் பிரிவு, NERD சென்றல் ஸ்ரீலங்கா |
| திருமதி பீ.டீ.சீ.ஜனஷாந்தி | இலத்திரனியல் பொறியியலாளர், நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளாக் நிலையம் |
| செல்வி எச்.குமாரதுங்க | பிரதிப் பணிப்பாளர், SLAB |

| உயிரியல் ஆய்வுகூடப் பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு | |
|---|---|
| பேராசிரியர் (திருமதி) சந்திராணி விஜேரத்ன | சிரேஷ்ட விரிவுரையாளர் தாவரவியல், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழம் |
| கலாநிதி (திருமதி) சீ.எம்.நாணயக்கார | தாவர விஞ்ஞானம் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி (திருமதி) எஸ்.ஜ.அபேகுணவர்தன | நுண் உயிரியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| திருமதி எச்.ஜீ.ஜீ.சூரியாராச்சி | பணிப்பாளர், உற்பத்திச் சான்றிதழ், SLSI |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பி.நி.அ இலங்கை தராதர அங்கீகார சபை |

**எந்திரமுறைப் பரிசோதனை, அளவை மற்றும் அளவீடுகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் டீ.ஏ.தந்திரிகொட | பௌதிகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழம் |
| டொக்டர் எஸ்.எம்.ஏ.நாணயக்கார | இயந்திரப் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. எச்.எல்.ஆர்.டபிள்யூ.மதநாயக்க | முன்னாள் பணிப்பாளர், அளவை நிறுவை திணைக்களம் (MUSSD) |
| திரு.எச்.பீ.என்.ஜே.குணசேகர | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்ப சேவைகள்), ITI |
| திரு. எஸ்.என்.நைல்ஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திருமதி என்.டீ.ஜீ.விஜேசிறிவர்தன | பிரிவுத் தலைவர், மின் மற்றும் இலத்திரனியல் பிரிவு, NERD சென்றல் ஸ்ரீலங்கா |
| திருமதி சீ. ஜனஷாந்தி | மின்னியல் பொறியியலாளர், மாதிரி தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளார்க் நிலையம் |
| செல்வி எச்.குமாரதுங்க | பிரதிப் பணிப்பாளர், SLAB |

**மருத்துவ / சிகிச்சை பரிசோதனைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் லால் ஜீ சந்திரசேன | உறுப்பினர், தனியார் சுகாதார சேவைகள் ஒன்றிணைப்பு மன்றம் |
| டொக்டர் (செல்வி) காந்தி ஆரியரத்ன | செயலாளர், தனியார் சுகாதார சேவைகள் ஒன்றிணைப்பு மன்றம் |
| டொக்டர் (செல்வி) சிரியானி நாணயக்கார | நுண் திசு நோய் ஆலோசகர், இலங்கை நோய்க் குறி ஆய்வு கல்லூரி |
| டொக்டர் (செல்வி) ஜயந்தி பீ எல்விட்டிகல | நுண்ணுயிரியல் ஆலோசகர், இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி |
| டொக்டர் ரொஷன் ஜயசூரிய | நுண்ணுயிரியல் ஆலோசகர், இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி |
| டொக்டர் (செல்வி) நிஷாத்யா ரணசிங்க | நுண்ணுயிரியல் ஆலோசகர், இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி |

| | |
|---|---|
| டொக்டர் (செல்வி) ஆர்.சீ.மீகம | இரசாயன நுண் திசு நோய் ஆலோசகர், இலங்கை நோய்க் குறி ஆய்வு கல்லூரி |
| திரு.எஸ்.சோமசிரி | முன்னாள் சிரேஷ்ட தர உறுதிப்பாட்டு முகாமையாளர். ITI |
| டொக்டர் (செல்வி) எம்.கே.பி.வீரசூரிய | சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல் திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| திருமதி ரீ.எம்.ஜீ.பத்திராஜ | விஞ்ஞான ஆராய்ச்சியாளர், NERD நிலையம் |
| டொக்டர் நில்வள கொட்டேகொட | விஞ்ஞான ஆராய்ச்சியாளர், SLINTEC |
| டொக்டர் மலிந்திர ஜுவான் படதுரகே | ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர், டிப்ட் புரடக்ட் நிறுவனம் |
| திரு. எம்.டி.சி.பெரேரா | பிரதிப் பணிப்பாளர், NBRO |

**உணவுப் பொருள் பாதுகாப்பு மற்றும் பரிசோதனை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| திரு. பீ.எஸ்.பீ.மென்டிஸ் | முன்னாள் பணிப்பாளர் / பிநிஅ, SLAB |
| டொக்டர் (திருமதி) பீ.தல்கஸ்வத்த | முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், SLSI |
| திரு. ஈ.ஜீ.சோமபால | முன்னாள் அரசாங்க பகுப்பாய்வாளர் |
| டொக்டர் ரீ.பீ.ஆனந்த ஜயலால் | பணிப்பாளர், (சுற்றாடல் மற்றும் தொழில்சார்) சுகாதாரப் பிரிவு, சுகாதார அமைச்சு |
| திரு. விதாகே ஷஹன் தேஜக | ஆரோக்கிய முகாமையாளர், கொழும்பு ஹில்டன் |
| செல்வி சஜீவிக பெரேரா | முதன்மை ஆராய்ச்சி விஞ்ஞானி, ITI |
| செல்வி ஒஸ்ரின் | உணவு பதனிடுவோர் சங்கம் |
| செல்வி எப். வீரவர்தன | முகாமையாளர், Ind-Expo சான்றிதழ் நிறுவனம் |

**வாகன வெளிவீச்சு பரிசோதனை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் ஆர்.ஏ.அத்தலகே | தலைவர், இயந்திரப் பொறியியல் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம் |
| திரு. ஏ.டபிள்யூ.திசாநாயக்க | பணிப்பாளர், WET நிகழ்ச்சித் திட்டம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் |
| திரு.ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா | உதவிப் பணிப்பாளர், MUSSD |
| திரு.ஜே.ஏ.கே.பீ.விஜேகுணசேகர | இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம், ITI |
| திரு. ஆர்.எம்.குலசேன | பிரதிப் பணிப்பாளர், வாயு கண்காணிப்பு பகுதி, மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| டொக்டர் டீ.எஸ்.ஜயவீர | பணிப்பாளர் நாயகம், பொது நிதி திணைக்களம், நிதி அமைச்சு |
| திரு. ஆர்.வீ.கே.கரவிட்ட | தகுதி நிலை பொறியியலாளர், பொறியியல் தரப் பிரிவு, SLSI |
| திரு. ஆர்.எம்.ஆர்.டீ.வீரசூரிய | சுற்றாடல் முகாமைத்துவ அதிகாரி, வாயு வள முகாமைத்துவ அதிகாரி |
| திரு. ரீ.விக்கிரமசிங்க | பணிப்பாளர் / பிநிஅ இலங்கை தராதர அங்கீகார சபை |
| திரு. எல்.எச்.டீ.பந்துசோம | பிரதிப் பணிப்பாளர், இலங்கை தராதர அங்கீகார சபை |

## SLAB யின் ஸ்தாபக அமைப்புச் செயற்பாடுகள்



## தராதர ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்கள் - 2014

**தராதர அங்கீகார பரிசோதனை ஆய்வுகூடங்கள்**

| **ஆய்வுகூடத்தின் பெயர்** | **பரிசோதனைத் துறை** |
|---|---|
| ஜவர்ஜீ பிரதர்ஸ், தேயிலை ஆய்வுகூடம்<br>ஜவர்ஜீ பிரதர்ஸ், நிறுவனங்கள் குழுமம் | இரசாயனப் பரிசோதனை<br>(தேயிலை) |
| இரசாயன ஆய்வுகூடம்<br>சர்வதேச ஆய்வுகூடங்கள் (தனியார்) நிறுவனம் | இரசாயனப் பரிசோதனை<br>(தேயிலை) |
| பகுப்பாய்வு ஆய்வுகூடம்<br>இலங்கை தேயிலைச் சபை | இரசாயன மற்றும் உயிரியல்<br>பரிசோதனை (தேயிலை) |
| ஆளணி கண்காணிப்பு ஆய்வுகூடம்<br>இலங்கை அணுசக்தி சபை | கதிர்வீச்சு அளவை |
| ருஹுணு பகுப்பாய்வு ஆய்வுகூடம்<br>ஹொல்சிம் லங்கா நிறுவனம் | இரசாயனப் பரிசோதனை<br>(சீமெந்து) |
| AUT விளக்கு பரிசோதனை ஆய்வு கூடம்<br>அட்வான்ஸ் யுனிவேர்சல் டெக்னோலஜி நிறுவனம்<br>சீனா | மின்சார மற்றும் இயந்திரவியல்<br>பரிசோதனை |
| பிராந்திய ஆய்வுகூடம் வெஸ்ரேன் புரடக்ஸன்<br>அம்பத்தளை தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச்<br>சபை | இரசாயனப் பரிசோதனை<br>(அலுமினியம் மற்றும் சுண்ணாம்பு) |

தராதர அங்கீகார மருத்துவப் பரிசோதனை ஆய்வு கூடங்கள்

| **ஆய்வுகூடத்தின் பெயர்** | **பரிசோதனைத் துறை** |
|---|---|
| Ohlums கிளினிக் அன்ட் லெபரெட்டீஸ் நிறுவனம் | மருத்துவ சிகிச்சை உயிரியல்<br>இரசாயனம்<br>நோய்க்குறி மருத்துவப்<br>பரிசோதனை நுண்ணுயிரியல்<br>மற்றும் குருதி நிணநீரியல் |
| சீமெட் ஹெல்த்கெயர் சேர்விசஸ் நிறுவனம் | மருத்துவப் பரிசோதனை<br>உயிரியல் இரசாயனம் /<br>இரசாயனம் / நோய்க்குறி<br>நுண்ணுயிரியல் மற்றும் குருதி<br>நிணநீரியல் |

| | |
|---|---|
| வயம்ப டயக்னொஸ்டிக் மெடிகல் லெபொடரி | மருத்துவப் பரிசோதனை<br>உயிரியல் இரசாயனம் /<br>இரசாயனம் / நோய்க்குறி<br>நுண்ணுயிரியல் மற்றும் குருதி<br>நிணநீரியல் |
| மெடிஸ்பொட் நிறுவனம் | மருத்துவப் பரிசோதனை |

தராதர அங்கீகார சான்றிதழ் அமைப்புக்கள்

| **ஆய்வுகூடத்தின் பெயர்** | **பரிசோதனைத் துறை** |
|---|---|
| Ind-Expo சான்றிதழ் நிறுவனம் | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ வழிமுறை (OHSAS) |
| Ind-Expo சான்றிதழ் நிறுவனம் | சூழல் முகாமைத்துவ வழிமுறை (EMS) |
| கொன்ரோல் யூனியன் இன்ஸ்பெக்சன்ஸ் நிறுவனம் கிறிட்டிகல் லொக்கேஷன் மலேசியா | தர முகாமைத்துவ வழிமுறை (QMS) |